Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண். 113 /2024

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 15.07.2025ம் நாளாகிய இன்று **திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்.,** அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொங்கியண்ணன் | தொழில் | : | |
| த/பெ.பெயர் | : | முத்தப்பக்கவுண்டர் | கிராமம் | : | |
| வயது | : | | மாவட்டம் | : | |

**வா.சா: முதல் விசாரணை:-**

நான் இந்த வழக்கின் 3ம் தரப்பினர் ஆகிய நான் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**வா.த.சா:-2 பொங்கியண்ணன் ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை (2ம் பிரதிவாதி தரப்பில்):-**

நானும் எனது குடும்பத்தாரும் புஞ்சை கிளாம்பாடி கிராமத்தில் 100 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பதாக வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றாலும் அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகளும் அவரது முன்னோர்களும் தாவா சொத்தை அனுபவிக்கிறார் என்று வாதிகள் கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தையும் தாத்தாவும் வாதிகள் குடும்பத்தினர் தான் தாவா சொத்தை அனுபவித்து வருவதாக எனக்கு சொல்லியிருக்கிறார் என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை மறைத்து ஒரே ஊர் காரர் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (1ம் பிரதிவாதி தரப்பில்)

வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எனக்கு தெரியாது என்றால்

Copy of Deposition

சரிதான். தாவா சொத்தின் பழைய் சர்வே எண், பட்டா எண், விஸ்தீரணம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து நஞ்சை பூமியா புஞ்சை பூமியா என்றால் புஞ்சை பூமி. தாவா சொத்தில் என்ன பயிர் செய்யப்பட்டது என்றால் தற்போது எதுவும் இல்லை. தண்ணீர் வந்தால் நெல் மற்றும் எள் பயிர் செய்வார்கள். தாவா சொத்து அருகில் எனக்கு பூமி இல்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் வாதிகள் கூறியதன் பேரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து யாருடைய பேரில் பதிவு இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>Sd xxx P.Sridevi,<br>Subordinate Judge,<br>Kodumudi |